DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் திங்கள்கிழமை 09ம் நாள் சாட்சியாகிய சரவணன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | வயது | 40 |
| த/பெ. | முனுசாமி | இனம் | ஆண் |
| கிராமம் | கிழவனம் | தொழில் | ஊராட்சி மன்ற தலைவர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.111/2023**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை).

**<u>முதல் விசாரணை 09.06.2025 அ.சா.6</u>**

1. நான் கிழவனத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 விநாயகம் எனது ஊரைச் சேர்ந்தவர். என்னிடம் காட்டப்படும் பார்வை மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் 2வதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>**

2. 27.05.2023ம் தேதி காலை 8 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.230/2023 வழக்கில் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், அண்ணாமலை என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மண்வெட்டி, கத்தியை கைப்பற்றினார் என்றால் இல்லை.

3. போலீஸ் விசாரணையில் சாட்சியாக பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் போட்டதாக தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரிகள் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.